

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**24/11/2024 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

**"அன்பகம்"**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024





விழுப்புரம் வடக்கு மாவட்டசெஞ்சி ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 21 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்குசெஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ,நகர செயலாளர் கார்த்திக்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, திண்டல்மலை நகர கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கூட்டுறவு துறையின் சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கடனுதவிகளை வழங்கினார். நிகழ்வில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சென்னை என்.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் க.ராஜ்குமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### என்.கௌதமன் வரவேற்புரை! அன்பில்மகேஷ்பொய்யாமொழி தலைமை!

# நாகையில் இன்று நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

### துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் நலத்திட்டங்கள் வழங்கி சிறப்புரை!

நாகை, நவ.24-

நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விவசாயிகள், மீனவர்கள், தூய்மை பணியாளர்கள், விளைாட்டு வீரர்கள், வீராங்கனைகள் 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (24.11.2024) காலை10.00 மணிக்கு நாகை வெளிப்பாளையம் புதிய பேருந்து நிலையம் அருக அவுரித்திடல் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

விழாவிற்கு நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான, பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஸ்பொய்யாமொழி தலைமை தாங்குகிறார்.

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வரவேற்புரையாற்றுகிறார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம்,

கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.காமராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, த.லைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்த ராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம்நீலமேகம், பொருளாளர் மு.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு விவசாயிகள், மீனவர்கள், தூய்மை பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் 2,500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவண்ன், கா.பழனியப்பன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார் பேரூர் கழகச் செயலாளர்கள் மரியசார்லஸ், முகமதுசுல்தான், கா.அட்சயலிங்கம், சி.சுப்பரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், கே.பாண்டியன், இல.பழனியப்பன், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், கோசி.குமார், எஸ்.பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, சிறுபான்மை நல உரிமைப்பிரிவு துணைச் செயலாளர் மு.சாகுல் ஹமீது, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், டி.கலையரசன், கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா, கு.பன்னீர்செல்வம்,

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், ப.உதயக்குமார், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராஜ், கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.பால்ராஜ், கே.எஸ்.சாகுல்ஹமீது, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.வி.டி.அருள், மு.தினேஷ்குமார், அ.பாரிபாலன், க.சத்தியமூர்த்தி, எஸ்.சந்தோஷ், இளம்.சுந்தர், எஸ்.வெற்றிச்செல்வன், ஆர்.சுரேந்தர், எஸ்.பாலமுரளி, த.தமயந்தி, எஸ்.புவனேஸ்கூரி, வ.கமல், வி.முகுந்தன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கௌசல்யாஇளம்பரிதி, ஒன்றியக் குழு தலைவர்கள் ஆர்.ஜி.தமிழரசன், செல்வராணிஞானசேகரன், வாசுகிநாகராஜன், வே.அனுசுயா, பேரூராட்சி தலைவர்கள் ஏ.டயானா சர்மிளா, இந்திராகாந்திசேகர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து நன்றி கூறுகிறார்.



தருமபுரி மேற்கு மாவட்ட ஐ.டி. விங் அமைப்பாளர் கு. தமிழழகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தமிழ்நாடு துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுதல்,வாக்குச் சாவடி அளவில் ஐ.டி. விங்குக்கு பொறுப்பாளர்கள் நியமித்தல், சமூகவலை தளத்தில் சிறப்பாக பதிவிட்டு பிரச்சாரம் செய்வது, உள்ளிட்ட கழக பணிகள் குறித்து விளக்கி பேசினார்.கூட்டத்தில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ராஜ்கமல்,சண்முகம்,ஆனந்த்,ஆதம், பரணி,தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்லோகேஷ்வரி,அறிவழகன்,கண்ணப்பன், பிரபாகரன்,சம்பத் மற்றும் ஒன்றிய, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக விளங்கியவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சராகவும் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூணாக விளங்கிய வருமான முரசொலி மாறன் அவர்களது 21 வது நினைவு தினத்தையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டக் கழக அலுவலகத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமன தே. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி டேம். வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், அஸ்லாம், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்
**நவம்பர் 24 (2006)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

வண்ணாரப்பேட்டை பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**